# கலாதீபம்

களாதீபம் KALADEEPAM

ஸ்தாபிதம் 2020 | 01.11.2025 | தீபம் 40


# கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற

## ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

### கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கான பணிப்பாளர் ஸ்ரீமா தசநாயக்க கலந்து சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயின்று இறுதிப் பரீட்சையில் சித்தியெய்திய 45 ஆசிரிய மாணவர்களுக்கான பயிற்றப்பட்ட ஆசிரியர் தராதரப்பத்திர சான்றிதழ் வழங்கும் விழா 03.10.2025 காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் சிறப்புற இடம்பெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இசுறுபாய கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்விக்கான பணிப்பாளர் திருமதி ஸ்ரீமா தசாநாயக்க கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர;களாக தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவன அபிவிருத்திக்கான பணிப்பாளர் டபிள் யு.ஜு.எஸ். குமார, நூலகத்திற்கான பணிப் பாளர், சரத் நந்தகுமார, கொட்டக்கல அரசினர் ஆசிரியர் கலாசாலையின் அதிபர் சு.பிரசாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி 6ஆம் பக்கம்










01.10.2025 — 31.10.2025 காலப்பகுதிக்கான நிகழ்வுகளின் தொகுப்பு

## கலாதீபக் குழுமம்

**காப்பாளர்**
திரு சந்திரமௌலீசன் லலீசன்
அதிபர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை

**பிரதம ஆசிரியர்**
செல்வி தர்ஷினி முத்துராஜா
விரிவுரையாளர், காப்பாளர் ஊடகமன்றம்

**வள ஆலோசனை**
திரு கணபதிப்பிள்ளை செந்தில்குமரன்
பிரதி அதிபர்

திரு தங்கராஜா கோபாலகிருஷ்ணன்
பிரதி அதிபர்

திருமதி சத்தியா ரஞ்சித்
உபஅதிபர்

**வளவாளர்கள்**
செல்வி மாலதி பத்மநாதன்
விரிவுரையாளர்

திரு வேலும்மயிலும் நந்தகுமார்
விரிவுரையாளர்

செல்வி சுஜீவா அருள்லிங்கம்
விரிவுரையாளர்

திரு இ.செந்தூர்ச்செல்வன்
ஆசிரிய மாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

செல்வி தி.பெலினி
ஆசிரிய மாணவி விஞ்ஞானநெறி (2023/2024)

**பட ஒருங்கிணைப்பு**

செல்வநாயகம் கஜந்தன்
தொழில்நுட்ப உதவியாளர்

திரு மு.கஜேந்திரன்
ஆசிரியமாணவன் விஞ்ஞானநெறி (2023/2024)

கலாதீபத்தில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்புடையவராவார். ஆக்கங்களில் வெளியிடப்படும் கருத்துக்கள் கலாசாலையின் கருத்துக்களாக கொள்ளப்படமாட்டா.

**வெளியீடு**

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
இருபாலை கோண்டாவில் வீதி,
இருபாலை.
தொலைபேசி: 0212230323

**மின்னஞ்சல் முகவரி**
kaladeepam.ktc@gmail.com


# கலாசாலை அன்னைக்கு அகவை 102

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் 102 ஆவது கலாசாலை நாள் 01.10.2025 ஆகும்

இதனை ஒட்டி கலாசாலையில் உள்ள சிவன் ஆலயத்தில் விசேட பூசை இடம் பெற்றதோடு ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் பொங்கல் வைபவமும் இடம்பெற்றது

கலாசாலையின் நீண்ட ஆயுளுக்கு பிரார்த்திப்பதாக ஆலய குருக்கள் சிவஸ்ரீ பா.செல்வசேனக்குருக்கள் சுவாமிக்கு விசேட அர்ச்சனை மேற்கொண்டு ஆசீர்வாதம் வழங்கினார்.

தொடந்து கலாசாலையின் 102 ஆவது கல்லூரி நாளை அடையாளப்படுத்தும் வகையில் கேக் வெட்டப்பட்டது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆசிரியர் கல்விக்கான பணிப்பாளர் கேக்கை வெட்டினார்.





கலாதீபம்
කලාදීප
Kaladeepam
கலாதீபம் – மின்சஞ்சிகை – கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஊடகக் கழக வெளியீடு
කලා දීපම , e - සඟරාව, කෝප්පායි ගුරු විද්‍යාලයීය මාධ්‍ය සංගමයේ ප්‍රකාශනයක්.
The Kaladeepam - e magazine - published by media club of Kopay Teachers' College

## நமது நோக்கு

### மொடியுல் அடிப்படையிலான கற்றல் முறை

கல்வி என்பது அறிவைப் பரிமாறும் செயலல்ல, மாறாக வாழ்க்கைக்குத் தயாராக்கும் ஒரு திறன் சார் விருத்திச் செயல்முறை என்ற தத்துவத்தை பின்பற்றுகிறது.

இந்த தத்துவார்த்த மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டு, இலங்கையின் பொதுக் கல்வி அமைப்பில் (தரங்கள் 6 முதல் 11 வரை) மொடியுல் அடிப்படையிலான கற்றல் அணுகுமுறை (Module-Based Learning Approach) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த அணுகுமுறை, உலகளாவிய கல்வி 4.0 (Education 4.0) தத்துவத்துடன் இணக்கமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், மாணவர்கள் 21ஆம் நூற்றாண்டின் சவால்களைச் சந்திக்கத் தேவையான விமர்சன சிந்தனை (Critical Thinking), ஒத்துழைப்பு (Collaboration), ஆக்கத்திறன் Creativity), தொடர்பாடல் மற்றும் இணைத்யதள அறிவு (Digital Literacy) ஆகிய திறன்ளை வளர்க்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.

மொடியுல் அடிப்படையிலான கற்றல் என்பது, பாடத்திட்டங்களை சிறு, தன்னிறைவு பெற்ற கற்றல் தொகுதிகளாக (Modules) பிரித்து வழங்கும் நவீன கல்வி அணுகுமுறையாகும்.

ஒவ்வொரு மொடியுலும் ஒரு குறிப்பிட்ட திறனை, கருப்பொருளை அல்லது கற்றல் பேறை, பேறுகளை மையமாகக் கொண்டது.

இது பாரம்பரிய பாடமுறைமையைவிட மாணவரின் செயற்பாடு, ஆய்வு மற்றும் திறன்களை மையமாகக் கொண்டதாகும்.

## கலாசாலை சிவன் கோயிலில் ஏடு தொடக்கல் விழா சிறப்பாக நடைபெற்றது

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத் தில் 02.10.2025 வியாழன் காலை 8.30 மணிக்கு இடம்பெற்றது. 9 மணிக்கு ஏடு தொடக்கும் நிகழ்வு இடம் பெற்றது.

இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்நிகழ்வில் கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் அவர்கள் ஏடு தொடக்கி வைத்தார்.

கலாசாலையில் குறைந்தளவு ஆசிரிய மாணவர்கள இருக்கின்ற போதிலும் 15 ற்கும் மேற்பட்ட (வெளியார்) சிறார்கள் வருகைதந்து ஏடு தொடக்கிவித்தனர்.





# News in Brief - Month of October

## 01.10.2025

### College Mother Turns 102.

On this occasion, a special pooja was performed at the Shivan Temple in Kopay. Organized by the College Teacher students.

The Temple Priest, Sivasri P.Selvasena Kurugal performed a special Pooja to Lord Shivan bestowed blessings on the College.

## 02.10.2025

### The Vani Vilaz

The event was held at Rathilakshmi Hall on Thursday at 10.30am under the chairmanship of the Principal of the College,

The event was graced by the presence of the Manipay Teacher Center Manager, Mrs.Vijayakumari Murugesampillai as the Chief Guest.

## 03.10.2025

### Specially Trained Teacher Award Ceremony held at the College

The ceremony to award the Trained Teacher Certificate to 45 teachers was held on the 03.10.2025 at the Rathilakshmi Hall of the Kopay Teachers' College.

The event, which was held under the chairmanship of the Principal of the College, S.Laleesan, was graced the occasion. The Chief Guest of this function was Mrs. Srima Dhasanayake, Director of Teacher Education, Ministry of Education. The special guests were W.J.S. Kumara, Director of Li- National Institute of Education, and S.Prasanthan. The Principal of Kottakala Teachers' College,

Along with them, M.A.M.Ripthi, M.W.M. Rapsi, lecturers from the Gampaha Teachers' Training Center, and Anantha Chandrakumara, Dilini Chathurika, Sermila Damayanthi, and Utara Sanjaya, officials from the Teacher Education Administration Branch of the Ministry of Education, were also attended.

Subsequently, a cake was cut to mark the 102nd College Day of the college. The Director of Teacher Education, who was the chief guest, cut the cake.

This was followed by a certificate presentation ceremony for 45 teachers. They were presented with medals and copies of certificates.

## 08.10.2024

### Teachers' Day Celebration

The Teachers' Day celebration held on Wednesday was organized by the Teachers' Student union at Kopay Teachers' College .

The chief guest of this function was Mr.A.Sathiya kumar, Senior Lecturer in the Department of Education, University of Jaffna and the former lecturer of this college.

The chief guest delivered a keynote address on the theme of Positive Psychology and Inclusive Education.

# News in Brief - Month of October

## Sports events organized by the College Teacher Student Union

A musical chair programme and the cricket match were organized by the College Teachers' Student union on this occasion.

The First event was, musical chair competition for lecturers. In this competition, A. Sujiva, M. Dharshini, and T. Prabalini lecturers of this college won first, second, and third places respectively.

After that, the cricket match was played. This is an eight-over cricket match was played between the lecturers team and the Teacher Student team. In which the lecturer team scored 82 runs and Teacher Student team scored 69 runs.

P. Baskaran, Physical Education Lecturer was selected as the best fielder in the match. Nimalan, Lecturer of this college was selected as the man of the match. The winning trophy for the lecturer team was received by the college principal S. Laleesan.

## 14.10.2025

### Veeramani Iyer Memorial Speech at the College

Mahavidhuvan M.D.N. Veeramani Iyer, who served as a Lecturer at Kopay Teachers' College for 33 years. This memorial was held on Tuesday morning, at the Rathilakshmi Hall under the chairmanship of the Principal S.Laleesan.

The Chief Guest Robert Arutsekaran, Dean of the Faculty of Ponnambalam Ramanathan Performing

## 22.10.2025

### Assembly

The event, held under the chairmanship of the Principal S.Laleesan, In this event the guest speaker- Thambipillai Mohan, the lecturer of English, National College of Education, who recently retired 0n 09.10.2025 delivered a speech about the importance of reading

## 28.10.2025

### Exploring Lived Decolonization - The People's Spaces Collective

Professor Nihal Perera of Ball State University, USA visited to Kopay Teachers' College and delivered a talk on Immersive Learning which was held on 28.10.2025 at 4 p.m.

## 29.10.2025

### Assembly - Online Reading Day

The Assemply at the college was held to promote online reading. Karaikavi Kandaiah Pathmananthan, Director of the Room to Read Project, Ministry of Education, participated as a guest speaker at this event, which was chaired by the College Principal S. Laleesan.

## 30.10.2025 - The feast

The Holy Marian Shrine feast day services were held at Kopay Teachers' College. was chaired by the College Principal S. Laleesan.

The Rev. Fr. Duke Vincent, Director Cathetical Centre, Jaffna Diocese celebrated the Mass.

# ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

1ஆம் பக்கத் தொடர்ச்சி…..

நிகழ்வின் ஆரம்பத்தில் கலாசாலையில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் விசேட பூசை இடம்பெற்றது. தொடர;ந்து ராஜீத் குழுவினரின் மங்கல நாதஸ்வர இசையுடன் குடை, ஆலவட்டங்கள் முதலிய மங்கல பொருட்கள் சகிதம் வரவேற்பு ஊர;வலம் இடம்பெற்றது.

தேசியக்கொடி, கலாசாலைக்கொடி என்பன ஏற்றப்பட்டமையைத் தொடர்ந்து சரஸ்வதி சிலைக்கான வழிபாடு முன்னெடுக்கப்பட்டது.

அடுத்து மங்கல விளக்கேற்றல் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து இறைவணக்கம் இசைக்கப்பட்டது.

கலாசாலையின் பிரதி அதிபர் க.செந்தில்குமரன் வரவேற்புரை ஆற்றினார். கலாசாலை அதிபர் தலைமையுரை ஆற்றினார் தொடர;ந்து பிரதம விருந்தினர் கொஞ்சும் தமிழில் தனது உரையை ஆற்றி சபையோரை மகிழ்வித்தார்.

தொடந்து கலாசாலையின் 102 ஆவது கல்லூரி நாளை அடையாளப்படுத்தும் வகையில் கேக் வெட்டப்பட்டது. பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆசிரியர் கல்விக்கான பணிப்பாளர் கேக்கை வெட்டினார்.

தொடந்து விருந்தினர்களுக்கான கௌரவம் இடம்பெற்றது. கலாசாலை முகாமைத்துவ குழுவினர் பொன்னாடை போர;த்தி கௌரவிக்க அதிபர் நினைவுச்சின்னங்களை வழங்கி கௌரவித்தார்.

அதனை அடுத்து 45 ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. அவர்களுக்கான பதக்கங்கள் அணிவிக்கப்பட்டு சான்றிதழ் பிரதிகள் கையளிக்கப்பட்டன.

சான்றிதழ் வழங்குவோருக்கான பெயர்ப்பட்டியலை பிரதிஅதிபர் த.கோபாலகிருஷ்ணனும் மாணவர் மன்றக் காப்பாளர் திருமதி சிவலோசனி சுரேந்திரனும் முன்னிலைப்படுத்தினார்.

சான்றிதழ் பெற்ற ஆசிரியர;கள் சார்பில் இரண்டாம்மொழி தமிழ் கற்கைநெறியைப் பயின்ற ஆசிரியர; புத்திஹா சுதர்சினி வீரமலை ஏற்புரையையும் நன்றியுரையையும் ஆற்றினார்.

நிகழ்வுகளை இரண்டாம் வருட ஆங்கில கற்கைநெறி ஆசிரிய மாணவி திருமதி தர்மினி சம்பத்குமார் முன்னிலைப்படுத்தினார்.

இவர்களுடன் கம்பஹா ஆசிரிய மத்திய நிலைய விரிவுரையாளர்கள் எம்.ஏ.எம்.ரிப்தி, எம் டபிள்யு.எம் ரப்சி ஆகியோரும், கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாகப்பிரிவு உத்தியோகத்தர;களான அனந்த சந்திரகுமார, டிலினி சத்துரிகா, சேர்மிளா தமயந்தி, உதார சஞ்சய ஆகியோரும் கலந்து கொண்டனர்.






# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வாணி விழா

02.10.2022 வியாளக்கிழமை காலை 10.30 மணிக்கு கலாசாலையின் அதிபர் சந்திரமெளலீசன் லலீசன் தலைமையில் ரதிலக்சுமி மண்டபத்தில் நடைபெற்றது .

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக முகாமையாளர் ஆசிரியர் வாண்மை விருத்திநிலையம் ,வலிகாமம்

திருமதி விஜயகுமாரி முருகேசம்பிள்ளை அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

இந்துமன்ற ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ் வுகளை விஞ்ஞானநெறி ஆசிரிய மாணவன் இ.செந்தூர்ச்செல்வன் தொகுத்து வழங்கினார்.

முதல் நிகழ்வாக ஆலயத்தில் உள்ள சரஸ்வதி உருவப்படம் ஊர்வலமாக மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது

மங்கல விளக்கேற்றும் நிகழ்ச்சியினைத் தொடர்ந்து தலைமை உரையினை கலாசாலையின் அதிபர் ஆற்றினார்.

வாழ்த்துரையினை பிரதிஅதிபர் த.கோபாலகிருஷ் ணன் ஆற்றினார்.

“பாடும் பணியில் பணித்தருள்வாய்” என்னும் தலை ப்பில் கலாசாலையின் விரிவுரையாளர் க.கமல நாதன் உரையாற்றினார்.

கலாசாலை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் தலைமையில் பட்டிமன்றம் நடைபெற்றது. ஆசிரிய மாணவர்களை உள்ளடக்கியதாக இப்பட்டிமன்றம் நடைபெற்றது.

இந்து மன்றக்காப்பாளர் கு.பாலசண்முகன் காப்பா ளர் உரை ஆற்றினார்.

நன்றி உரையினை முதலாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி திருமதி நிரோஜன் கௌசிகா ஆற்றினார்.

மகேஸ்வர பூசையுடன் நிகழ்வுகள் சிறப்புற நிறைவு பெற்றது










# ஆசிரிய மாணவர் மன்றம் நடாத்திய ஆசிரியர் தின விழா

08.10.2025 புதன்கிழமை காலை 08.30 மணிக்கு கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் ஆசிரியர் தின விழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாசாலையின் பழைய மாணவரும், முன்னாள் விரிவுரையாளரும், யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமாகிய திரு.அ.சத்திய குமார் கலந்துகொண்டார்.

விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவர் இ. செந்தூர்ச்செல்வனின் முன்னிலைப்படுத்தலுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் கலாசாலை விரிவுரையாளர்கள் கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

தொடர்ந்து தேசிய கொடி ஏற்றல், தேசிய கீதம் இசைத்தல், கலாசாலை கொடி ஏற்றல், சரஸ்வதி திரு உருவ வழிபாடு என்பன இடம்பெற்றன.

ரதிலக்ஷ்மி மண்டபத்தின் வாயிலில் ஆசிரியர்கள் ஞானஒளி ஏற்றுபவர்கள் என்பதற்கு குறியீடாக விரிவுரையாளர்களின் கைகளில் சுடர்கள் வழங்கப்பட்டன. அவற்றை குறிக்கப்பட்ட இடத்தில் வைக்கப்பட்டன.

கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்து என்பதைத் தொடர்ந்து விரிவுரையாளர்கள் ஆசிரியர் கீதம் இசைத்தனர். தொடர்ந்து வரவேற்புரை திரு. கீபத்துள்ளா அவர்களாலும், அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் அவர்களின் தலைமை உரையும், ஆசிரிய மாணவர் சார்பில் பெலினி சசிராசனின் ஆசிரியர் பற்றிய உரையும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து விரிவுரையாளர்கள் ஆசிரியர் மாணவர்களால் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து பிரதம விருந்தினருக்கான கௌரவிப்பு முகாமைத்துவ குழுவால் நிகழ்த்தப்பட்டது. நேர் உளவியலும் உட்படுத்தல்க் கல்வியும் என்ற தொனிப்பொருளில் பிரதம விருந்தினர் சிறப்புரை ஆற்றினார்.

தொடர்ந்து விரிவுரையாளர்களினதும் ஆசிரிய மாணவர்களினதும் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. விரிவுரையாளர் அ.சுஜீவா அவர்களின் ஆங்கில கவிதை, விரிவுரையாளர்கள் இணைந்து கா.கமலநாதன் தலைமையில் அந்தக்கால ஆசிரியருக்கும் இந்தக்கால ஆசிரியர்கக்குமான வேறுபாட்டை மையமாக கொண்ட வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

தர்மினி சம்பத்குமார், இ.ராசநாதன் இணைந்து பாடல் பாடி சபையை மகிழ்வித்தனர். கவிதையை ரவிச்சந்திரன் தேவமணி வழங்கினார்.

விரிவுரையாளர் கழக செயலாளர் த.தவசேகர் ஏற்புரை வழங்கினார். விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்களுக்கு பரஸ்பர சிற்றுண்டிகளை வழங்கினார்கள். இறுதியாக நன்றியுரை ஆசிரிய மாணவி ஜெயராணியால் நிகழ்த்தப்பட்டது.







# ஆசிரியர் தினத்தை ஒட்டி ஆசிரிய மாணவர் மன்றம் ஏற்பாடு செய்த விளையாட்டு நிகழ்வுகள்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சங்கீதக்கதிரை நிகழ்வும் துடுப்பாட்ட நிகழ்வும் இன்று 08.10.2025 மாலை 4 மணிக்கு ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தன.

முதலாவதாக விரிவுரையாளர்களுக்கான சங்கீதக் கதிரை நிகழ்வு இடம்பெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் விரிவுரை யார்களான அ.சுஜிவா, மு.தர்ஷினி, த.பிரபாலினி ஆகியோர் முறையே முதலாம் இரண்டாம் மூன்றாம் இடங்களை பெற்றனர்.

அதன் பின்னர் கிரிக்கெட் போட்டி இடம்பெற்றது. எட்டு (ஓவர்) பந்து பரிமாற்றம் கொண்ட துடுப்பாட்ட போட்டி விரிவுரையாளர் அணிக்கும் ஆசிரிய மாணவர் அணிக்கும் இடையே இடம்பெற்றது

இதில் விரிவுரையாளர் அணி 82 ஓட்டங்களை பெற்றது.

ஆசிரிய மாணவர் அணி 69 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இப்போட்டியில் சிறந்த களத்தடுப்பாளராக உடற்கல்விநெறி விரிவுரையாளர் பா.பாஸ்கரன் தெரிவு செய்யப்பட்டார்.

இன்றைய போட்டியின் ஆட்ட நாயகனாக விரிவுரைய-ாளர் நிமலன் தெரிவுசெய்யப்பட்டார். விரிவுரையாளர் அணிக்கான வெற்றி கிண்ணத்தை கலாசாலை அதிபர் ச.லலீசன் பெற்றுக் கொண்டார்.

வெற்றிக் கிண்ணங்களை பிரதி அதிபர்களான க.செந்தில்குமரன் த..கோபாலகிருஷ்ணன் மாணவர் மன்றகாப்பாளர் பொ.சற்குணநாதன் ஆகியோர் வழங்கினர்

ஆசிரிய மாணவர்களுக்கும் விரிவுரையாளர் களுக்குமான இந்நிகழ்வுகள் இருவரிடையேயும் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தின.











# கலாசாலையில் சிறப்புற இடம்பெற்ற வீரமணி ஐயர் நினைவரங்கம்

## அதிதிப் பேச்சாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் பீடாதிபதி தவமைந்தன் றொபேட் அருட்சேகரன் கலந்து கொண்டு சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 33 ஆண்டுகள் விரிவுரையாளராகப் பணியாற்றிய மகாவித்துவான் ம.த.ந. வீரமணி ஐயர் நினைவரங்கம் 14.10.2025 செவ்வாய் காலை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக சேர் பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் பீடாதிபதி தவமைந்தன் றொபேட் அருட்சேகரன் கலந்து கொண்டு தமிழிசை வளர்ச்சியில் வீரமணி ஐயரின் பங்களிப்பு என்ற பொருளில் நினைவுப் பேருரை ஆற்றினார்.

வீரமணி ஐயர் பற்றிய ஆவணக் காணொளியை ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜன் காட்சிப் படுத்தினார்

நடனத்துறை விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை அதிதிக்கான அறிமுக உரையை ஆற்றினார்

கலாசாலையில் உள்ள வீரமணி ஐயர் திருவுருவச் சிலைக்கான வழிபாடும் இடம்பெற்றது

இந்நிகழ்வுகளை இரண்டாம் வருட ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவி ஜே.சுலோசனாதேவி முன்னிலைப் படுத்தினார்.

வீரமணி ஐயாவின் வாழ்வு என்ற தலைப்பில் இரண்டாம் வருட ஆரம்பக் கல்வி ஆசிரிய மாணவன் சி.டனிஸ்டன் உரை ஆற்றினார்.

நிறைவாக கற்பகவல்லி நின்.... என்ற பாடலை இரண்டாம் வருட ஆரம்பக் கல்வி ஆசிரிய மாணவன் இ.இராசநாதன் பாடினார்.

அதிதி தவநாதன் றொபேட் அருட்சேகரன் அவர்கள் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.













# கலாசாலையில் ஆங்கில மொழி மூலமான ஒன்று கூடல்

## அதிதிப் பேச்சாளராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் இருந்து இளைப்பாறுகை பெற்ற ஆங்கிலத்துறை விரிவுரையாளர் தம்பிப்பிள்ளை மோகன் கலந்து கொண்டு சிறப்பித்தார்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இவ்வார புதன் ஒன்று கூடல் ஆங்கில மொழிமூலம் முன்னெடுக்கப்பட்டது

ஆங்கில நெறியினரின் ஒழுங்கு அமைப்பில் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அண்மையில் (09.10.2025) யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியில் இருந்து இளைப்பாறுகை பெற்ற ஆங்கிலத் துறை விரிவுரையாளர் தம்பிப்பிள்ளை மோகன் அதிதி பேச்சாளராக கலந்து கொண்டார்

வாசிப்பின் முக்கியத்துவம் பற்றிய ஆவணக் காணொளியை ஆசிரிய மாணவி கௌசிகா நிரோஜன் காட்சிப் படுத்தினார்

ஆங்கிலத்துறை விரிவுரையாளர் வசந்தி வயித்திலிங்கம் அதிதிக்கான அறிமுக உரையை ஆற்றினார்.

இந்நிகழ்வுகளை இரண்டாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி லிஜானி டேவிட் முன்னிலைப்படுத்தினார்.

பாடப்புத்தகத்திற்கு அப்பால் வாசிப்பை மேம்படுத்துவோம் என்ற தலைப்பில் இரண்டாம் வருட ஆங்கிலநெறி ஆசிரிய மாணவி தர்மினி சம்பத்குமார் உரை ஆற்றினார்.

அதிதி தம்பிப்பிள்ளை மோகன் அவர்கள் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டார்.











# சுர்வதேச இணைய தினத்தை முன்னிட்ட புதன் வாராந்த ஒன்றுகூடல் அதிதிப் பேச்சாளராக காரைக்கவி கந்தையா பத்மானந்தன் கலந்து கொண்டு சிறப்பித்தார்

கலாசாலையில் புதன் வாராந்த ஒன்று கூடல் இணையவழி வாசிப்பை ஊக்குவிப்பதாக முன்னெடுக்கப்பட்டது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்வி அமைச்சில் செயற்படுத்தப்படும் Room to Read செயற்றிட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் காரைக்கவி கந்தையா பத்மானந்தன் அதிதிப் பேச்சாளராக கலந்து கொண்டார்.

இணையத்தின் முக்கியத்துவம் பற்றிய ஆவணக் காணொளியை விசேட கல்விநெறி ஆசிரிய மாணவி நுஸ்லா சாஜஹான் காட்சிப் படுத்தினார்

தமிழ்த்துறை விரிவுரையாளர் வேல் நந்தகுமார் அதிதிக்கான அறிமுக உரையை ஆற்றினார்.

இந்நிகழ்வுகளை இரண்டாம் வருட கிறிஸ் தவநெறி ஆசிரிய மாணவி முன்னிலைப்படுத் தினார்.

இணையம் என்ற தலைப்பில் இரண்டாம் வருட உடற்கல்விநெறி ஆசிரிய மாணவி உசாந்ந் தினி விமல்ராஜ் உரை ஆற்றினார்.

வாசிப்பை ஊக்குவிக்கும் விதமாக கலாசாலை விரிவுரையாளர்களுக்கும், ஆசிரிய மாணவர் களுக்கும் நூல்களை அன்பளிப்பாக வழங்கினார்

அதிதி காரைக்கவி கந்தையா பத்மானந்தன் அவர்கள் கலாசாலை முகாமைத்துவ குழு வினரால் பொன்னாடை போர்த்தி மாலை அணி வித்து கௌரவிக்கப்பட்டார்.











# கலாசாலை மரியன்னை சிற்றாலய பெருநாள் வழிபாடுகள்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அமைந்துள்ள புனித மரியன்னை சிற்றாலயத்தின் பெருநாள் வழி-பாடுகள் 30.10.2025 வியாழக்கிழமை காலை கலா சாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றன.

இதன் போது மறைக்கல்வி நடுவுநிலைய இயக் குநர் அருட்பணி டியூக் வின்சென்ட் திருப் பலியை ஒப்புக்கொடுத்தார்

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் வாழ் த்துரை வழங்கினார்

கிறிஸ்தவ மன்ற காப்பாளர் தனம் பிரபாலினி கிறிஸ்தவ பாட விரிவுரையாளர்கள் யே.பாலகுமார், ம.பத்மராஜா ஆகியோர் நிகழ்வுகளை நெறிப்ப டுத்தினர்

நிகழ்வில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூ ரி மாணவ ஆசிரியர்களும் பங்கேற்றனர்.







# பாராட்டி வாழ்த்துகிறோம்

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை உத்தி யோகத்தர்கள் ஐவர் SLTES - II ற்கு பதவி உயர்வு பெற்றுள்ளார். அவருடைய பணிக்காலம் சிறப்பபுற அமைய கலாசாலை சமூகத்தின் சார்பில் வாழ்த்துகிறோம்.

1. திருமதி சந்திரிகா தர்மரட்ணம் (SLTES II)

The National Institute of Education (NIE) has organized an awareness programme on the New Education Reforms (Common) for the Teacher Educators of Teachers' Training Colleges.

Kopay Teachers' College Principal and 25 Lecturers of our college participated in this programme at Pulathispura NCOE on the 25 of October 2025.








# Workshop on Immersive Learning

Professor Nihal Perera of Ball State University, USA visited to Kopay Teachers' College and delivered a talk on Immersive Learning which was held on 28.10.2025 at 4 p.m.



## துயர் பகிர்கிறோம்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் (கல்வி) திரு த. கோபாலகிருஷ்ணன் அவர்களின் அன்புத் தாயார் தங்கராசா தவநாயகி 13.10.2025 திங்கட்கிழமை காலமானார்

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய கலாவாலை சமூகம் சார்பில் பிரார்த்திக்கிறோம்

